
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1235

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்




# ‘காவலுக்குக் கெட்டிக்காரன்’
# ஏழை விவசாயிகளைக் காக்கும் வீரன்!

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

66

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

*1990*-ஆம் ஆண்டு கலைஞர் திரைக்கதை வசனம் எழுதி, வீ.கலாநிதி தயாரிப்பில் சந்தானபாரதி இயக்கி வெளிவந்த திரைப்படம் ‘காவலுக்குக் கெட்டிக்காரன்’. படத்தின் கதை அனந்து. இப்படத்தில் பிரபு, நிரோஷா, வீ.கே.ராமசாமி, மனோரமா, நாசர், மாதுரி, ராஜேஷ், எஸ்.எஸ்.சந்திரன், வெண்ணிற ஆடை மூர்த்தி, பாண்டு, ராகவேந்தர் ஆகியோர் நடித்துள்ளனர். இசை இளையராஜா, பாடல்கள் கலைஞர், மற்றும் ஜீவபாரதி எழுதினர்.

### திரைப்படத்தின் கதை

போலீஸ் கான்ஸ்டபிள் பஞ்சவர்ணம் (வீ.கே.ராமசாமி) ஓய்வுபெற்று, வீட்டுக்கு வருகிறார். அவரை அவரது மனைவி பொன்னுத்தாயி (மனோரமா) வரவேற்கிறார். ‘வழிவழியாகப் போலீஸ் வேலை பார்த்து வரும் தனது குடும்பத்தில், தன்னைத் தொடர்ந்து தனது மகனும் போலீஸாக வேண்டும்’ என்கிறார். ஆனால், அவர் மகன் திலீபன் (பிரபு) போலீஸ் வேலைக்குப் போகாமல் ஆசிரியராகப் போய் விடுகிறான். அவனை அவ்வேலையில் இருந்து விடுவித்து, எப்படியாவது போலீஸ் ஆக்கிவிட வேண்டும் என்று திட்டம் போடுகிறார்.

திலீபன் வேலை செய்யும் பள்ளியில் புதிய ஆசிரியராக வரும் அறிவுக்கொடிக்கும் (நிரோஷா) திலீபனுக்கும் காதல் மலர்கிறது. ஆனால், பள்ளித் தலைமை ஆசிரியரும் (வெண்ணிற ஆடை மூர்த்தி) அறிவுக்கொடி மீது ஆசைப்படுகிறார்.

அதனால், திலீபன் மீது கோபமாக இருக்கிறார். இதனைப் பயன்படுத்தி திலீபனின் தந்தை பஞ்சவர்ணம், திலீபனை வேலையை விட்டு நீக்க வைத்து, போலீஸ் பயிற்சிப்பள்ளிக்கு அனுப்புகிறார். காவலர் பயிற்சிப் பள்ளி அதிகாரியிடம் (மேஜர் சுந்தரராஜன்) திலீபன் பயிற்சி பெற்றுத் திரும்புகிறான்.

பலிகொடுத்தான்பட்டி என்ற ஊருக்கு, சப் இன்ஸ்பெக்டர் பணி நியமன ஆணை வருகிறது. தனது நண்பன் கிட்டு (ஆர்.எஸ்.சிவாஜி) ஆலோசனைப்படி, மெடிக்கல் லீவு போட்டு விட்டு, பயங்கரமான ஊரான பலிகொடுத்தான் பட்டிக்குச் சென்று அந்த ஊரைப்பற்றி அறிந்து, பிறகு பணியில் சேரலாம் என்று திட்டம் போடுகின்றனர்.

அதன்படி பலிகொடுத்தான் பட்டியில் உள்ள கிட்டுவின் நண்பன் சிவாவை (நாசர்) தேடி, திலீபன் செல்கிறான். அவன் ஊருக்குள் செல்லும் அதே நேரத்தில், சிவாவும் அந்த ஊர் மக்களும் பன்னீர் என்பவரின் பிணத்தைத் தூக்கிக் கொண்டு ஊர்வலமாகச் செல்கின்றனர். அவர்களுடன் திலீபனும் செல்கிறான்.

அப்போது அங்கு வரும் காவல்துறை அவர்களைக் கைதுசெய்து அழைத்து வந்து லாக்கப்பில் அடைக்கின்றனர். திலீபனும் அவர்களுடன் சேர்த்து அடைக்கப்படுகிறான். ‘சிவா, நீ யார்?’ என்று கேட்க திலீபன், “நான் பார்த்திபன். கிட்டுவின் நண்பன், கல்வெட்டு ஆய்வுக்காக இந்த ஊருக்கு வந்திருக்கிறேன்” என்று சொல்கிறான்.

அப்போது காவல் நிலையத்திற்கு வரும் பண்ணையார் பாலையா (ராஜேஷ்) போலீஸ் ஏட்டு மன்னாரிடம் (எஸ்.எஸ்.சந்திரன்) சொல்லி, சிவா உள்ளிட்ட நண்பர்களைத் தனது சொந்த ஜாமினில் விடுதலை செய்ய வைக்கிறார்.

இதைப் பார்க்கும் திலீபன், பாலையாவை மிகவும் நல்ல மனிதர் என்று நினைக்கிறான். ஆனால், அந்தப் பாலையாதான் பங்கஜம் என்ற இளம்பெண்ணைப் பாலியல் வன்முறை செய்து கொலை செய்தார் என்பதையும், அதற்கு நியாயம் கேட்ட அவளது அண்ணன் பன்னீரையும் கொலைசெய்தார் என்பதையும், சிவா அறிந்து கொண்டதால்தான் பாலையாவை எதிர்த்துப் போராடுகிறான்.

இதற்கிடையே, தன்னிடம் தவறாக நடக்க முயற்சிக்கும் தலைமையாசிரியரை அறிவுக்கொடி கன்னத்தில் அறைந்துவிட்டு, தனது கிராமத்திற்கு வந்துவிடுகிறாள். அந்த வருடம் விளைந்த நெல்லை, வழக்கம்போல் பாலையாவிடம் அடிமாட்டு விலைக்கு விற்பதற்குப் பதில் வெளியூரில் கொண்டுபோய் விற்றால், கூடுதல் பணம் கிடைக்கும் என்று சிவா விவசாயிகளிடம் எடுத்துச்சொல்லி, வண்டிகளில் நெல் மூட்டைகளை ஏற்றிக்கொண்டு செல்லும் வழியில், பாலையா குறுக்கே வந்து மறித்து, ‘மூட்டைக்கு 20 ரூபாய் அதிகமாகத் தருகிறேன்’ என்று சொன்னவுடன், விவசாயிகள் அனைவரும் திரும்பிச்சென்று விடுகின்றனர். ஆனால், சிவா மட்டும் வெளியூர் சென்று நெல்லை விற்றுவிட்டுத் திரும்புகிறான்.

அப்போது வழியில், பாலையாவின் ஆட்கள் வழிமறித்து, அவனைத் தாக்கி மாட்டு வண்டியில் தூக்கிப்போட்டு அனுப்புகின்றனர். சிவாவை மருத்துவமனையில் காண வரும் பாலையா, செலவுக்குப் பணம் கொடுக்கும்போது, அதை வாங்க மறுத்து அவனது முகத்தில் காறி உமிழ்கிறாள் மனைவி செல்லக்கிளி. இதனால், கோபம் கொள்ளும் பாலையா தனது அடியாட்களுடன் வந்து, வீட்டில் தனியாக இருக்கும் செல்லக்கிளியை மானபங்கம் செய்ய முயற்சிக்கிறான். அப்போது அங்கு வரும் திலீபன் பாலையாவைத் தடுக்கிறான்.

ஆனால், பாலையாவின் அடியாட்கள் திலீபனைத் தாக்கி தூணில் கட்டிப்போட்டு, அவன் கண்ணெதிரே செல்லக்கிளியை பாலியல் வன்கொடுமை செய்கிறான் பாலையா. அதனால் செல்லக்கிளி தீக்குளித்து தற்கொலை செய்துகொள்கிறாள். தனது கண் முன்னே நடந்த கொடுமைகளைத் தாங்க முடியாமல், உடனடியாக போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பணியில் சேர்ந்து பாலையாவை கைது செய்ய வருகிறான் திலீபன். ஆனால், பாலையா வீட்டில் டி.எஸ்.பி. அமர்ந்து இருக்கிறார். திலீபனிடம் பாலையாவுக்கு ஆதரவாகச் செயல்படும்படி அறிவுரை சொல்கிறார்.



தனது மனைவிக்கு நடந்த கொடுமைகள் சிவாவுக்குத் தெரியவர, அவன் பாலையாவைப் பழிவாங்க வருகிறான். அவனை பாலையாவின் ஆட்கள் பிடித்து போலீசில் ஒப்படைக்கின்றனர். சிவாவை சிறையில் அடைக்கும் திலீபன், அதே நேரம் பாலையாவையும் கையும் களவுமாகப் பிடிக்கத் திட்டமிடுகிறான்.

ஊர்க்கோயிலில் இருந்த முருகன் சிலையைத் திருடி பாலையா மறைத்து வைத்திருப்பதை, ஏட்டு மன்னார் குடிபோதையில் திலீபனிடம் உளறிவிட, திலீபன், முருகன் சிலையை மீட்பதுடன் பாலையாவைக் கைதுசெய்து இழுத்துச் செல்கிறான். ஆனால், பாலையாவின் அடியாள் ஒருவன், தானே முருகன் சிலையைத் திருடி மறைத்து வைத்ததாக குற்றத்தை ஒப்புக்கொண்டு, கைதாவதால் பாலையா நிரபராதி என விடுதலையாகிறார்.

இறுதியில் காவல் நிலையச் சிறையில் இருந்து போலீஸ்காரர் கண்ணையா (பாண்டு) உதவியுடன், சிவாவை பாலையாவின் ஆட்கள் கடத்திச் செல்கின்றனர். சிவாவைத் தப்பவிட்ட குற்றத்திற்காக, திலீபனை அதிகாரி சஸ்பெண்ட் செய்கிறார்.

ஏட்டு மன்னாரின் உதவியுடன் சிவாவை திலீபன் மீட்டு வருகிறான். இதற்கிடையே விவசாயிகள், அறிவுக்கொடியின் அப்பா (டி.எஸ்.ராகவேந்தர்) தலைமையில், நெல் மூட்டைகளை வெளியூரில் விற்க கொண்டு செல்கின்றனர். இதனைக் கேள்வியுறும் பண்ணையார் பாலையா துப்பாக்கியை எடுத்துக்கொண்டு தனது அடியாள் படையுடன் வந்து நெல் மூட்டைகளைப் பறித்து, தனது லாரியில் ஏற்றச் சொல்கிறார்.

விவசாயிகளுக்கும் அடியாள்களுக்கும் இடையே சண்டை நடக்கிறது. அப்போது அங்கு வரும் சிவாவும் திலீபனும் பண்ணையாருடன் சண்டையிடுகின்றனர். பண்ணையார் தனது லாரியில் ஏறித் தப்பிச் செல்கிறார். திலீபனும் அந்த லாரியில் ஏறி பாலையாவைப் பிடிக்க முற்படுகிறான். மக்கள் லாரியைத் துரத்தி வருகின்றனர்.

தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த லாரியில் ஏற்றப்பட்டிருந்த இரும்புக்கம்பியில், பாலையாவின் லாரி மோதி பாலையா கோரமான முறையில் இறந்து போகிறார். ஏழை விவசாயிகளும், சிவாவும் திலீபனைக் கொண்டாடுகின்றனர். முதலமைச்சர் கலைஞரிடம் திலீபன் விருது பெறுவதுடன் படம் நிறைவடைகிறது.

**...காட்சி விரியும்**

> **“ஏழை விவசாயிகளும், சிவாவும் திலீபனைக் கொண்டாடுகின்றனர். முதலமைச்சர் கலைஞரிடம் திலீபன் விருது பெறுவதுடன் படம் நிறைவடைகிறது.”**

## ‘போலி ஜனநாயகன்’- பிம்பம் உடைகிறது!

தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்த பின், நடைபெறும் முதல் சட்டப்பேரவைத் தொடரிலேயே எதிர்க்கட்சிகளை எதிர்கொள்ள முடியாமல், எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல், குறுக்கு வழியைக் கையாளும் உத்தியை எடுத்திருக்கிறது ஆளுங்கட்சி. மேகதாதுவில் கர்நாடக அரசு புதிய அணை கட்டக்கூடாது என்பது, தமிழ்நாட்டின் ஒருமித்த நிலைப்பாடு. அந்த ஒருமித்த நிலைப்பாடு தொடர்பான தீர்மானம், அதையொட்டி சட்டமன்றக் கட்சி உறுப்பினர்களின் கருத்துகளை வெளியிட்ட ஆளுங்கட்சி, அதற்கடுத்து ஆளுநர் உரை மீதான விவாதத்தை முழுமையாக இருட்டடிப்பு செய்துள்ளது.

பி.ஆர். டீம் கொடுக்கும் ஸ்கிரிப்டை, மனப்பாடம் செய்து வந்து பிரச்சாரக் கூட்டங்களில் ஏற்ற இறக்கத்துடன், சினிமாத்தன முக பாவனைகளோடு பேசும் முதலமைச்சர் விஜய்யால் சட்டமன்றத்தில், எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதில் சொல்ல முடிவதில்லை. எதிர்க்கட்சிகள் ஏதாவது கேட்டு விடுவார்களோ என்ற அச்சத்திலே இறுக்கமாகவே எப்போதும் சட்டசபையில் முகத்தை வைத்திருக்கிறார். யாரும் கேள்வியே கேட்கக்கூடாது என்றுதான், கேள்வி-பதில் அமர்வே இல்லாமல் சட்டசபையை நடத்துகிறார்கள். இந்நிலையில், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் யாராவது சட்டம் - ஒழுங்குப் பிரச்சினைகளையோ, மின்வெட்டு சிக்கலையோ கேட்டுவிடுவார்களோ என்று அஞ்சி, நேரலையையும் துண்டித்து விட்டார்கள்.

ஆனால் இதுகுறித்து, பிரதான ஊடகங்கள் பலவும் கேள்வி எழுப்பாமல் மௌனம் காத்தன. சட்டசபையில் தி.மு.க. உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கும் துறைசார் அமைச்சர்கள் எவருமே பதில் சொல்லாமல், 2 அமைச்சர்கள் மட்டுமே எல்லாவாற்றுக்கும் பதில் தருகிறோம் என்ற பெயரில் சம்பந்தம் சம்பந்தம் இல்லாமல் பேசியிருக்கின்றனர். அப்போதும் கூட முதலமைச்சர் வாயைத் திறக்கவே இல்லை. இதுதான் ஜனநாயகமா என சமூக ஊடகங்களில் மக்கள் கேள்விகளால் துளைத்தெடுத்து வருகிறார்கள். ஆளுங்கட்சியின் போலி முகத்திரை கழன்று அம்பலமாகி வருகிறது.

## ஃப்ளாஷ்பேக்





மணிவண்ணன் சுவாமிநாதன்

### கலைஞர் தொடங்கி வைத்த கிளைக் கழகம்!

1971-ஆம் ஆண்டில், இன்றைய சிவகங்கை மாவட்டம் (அன்றைய ராமநாதபுரம் மாவட்டம்), காரைக்குடி அருகே பள்ளத்தூரில், நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் வருகை தந்தார். செல்லும் வழியில், எங்கள் ஊரான வ.சூரக்குடியில் மக்கள் பெரும் திரளாகத் திரண்டு நின்று அவருக்கு வரவேற்பு அளித்தனர். அங்கு கிளைக் கழகத்தினையும் தொடங்கி வைத்து, மாநில உரிமைகள் குறித்து இரண்டு நிமிடங்கள் சிறிய உரையாற்றிச் சென்றதை, இப்போதும் மக்கள் நினைவுகூர்வர். அப்போது எடுக்கப்பட்ட இந்தப் படத்தில், எங்கள் ஊரைச் சேர்ந்த சுந்தராம்பாள் அருணாச்சலம், பாமா மாமுண்டி, நாகநாதன் பத்மா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**- மணிவண்ணன் சுவாமிநாதன்,**
**வன்னியன் சூரக்குடி, திருப்பத்தூர்,**
**சிவகங்கை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கட்டுப்பாடு வலியுறுத்திய அண்ணா!

1953-ஆம் ஆண்டு, மும்முனைப் போராட்டத்தில் ஈடுபட்டு பேரறிஞர் அண்ணாவும் பல கழகத் தோழர்களும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். சிறை புகுந்த தோழர்கள், சிறைச்சாலை அறைக்குள் இருக்கும் சிறுநீர்ப் பானையை வெளியே கொண்டு வரவும், சிறை உணவை வாங்கிக்கொள்ளவும் மறுத்து, போராட்டங்களில் ஈடுபட்டனர். சில இடங்களில் சிறை வார்டன்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் தகராறு வளர்ந்தது. இதையறிந்த அண்ணா, கழகத் தோழர்கள் சிறை சட்டத் திட்டங்களைத் தவறாமல் கடைபிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900